1971 ஜூன் 25]

Primary Health Centre at Kakkadesam in Thally Block

* 52 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal pending with the Government to start a Primary Health Centre at Kakkadesam in Thally Block, Dharmapuri District?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தர்மபுரி மாவட்டத்தில் காக்கா தேசத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறுவ மார்ச் 71-ல் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister when exactly this is going to take effect and when exactly they are going to have the hospital started?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கே பழைய கட்டடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட சுகாதார அதிகாரியாலும், ஒன்றியத் தலைவராலும் அந்த மருத்துவ மனை அமைக்க ஏற்பாடாகி வருகிறது. அது பழுதுபார்க்கப்பட்ட பிறகு அந்த மருத்துவ மனை நிறுவப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The delay, as far as I know, is due to some local politics in the Panchayat Union Council at Thalli. May I request the Hon. Minister for Health to make an enquiry and see that the Primary Health Centre is given to Kakkadesam?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கே உள்ள ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 51 கவுன்சிலர்களில் 27 பேர் அந்த மருத்துவமனை தாளியில் வைக்க வேண்டுமென்றும், 24 பேர் காக்கா தேசத்தில் வைக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். ஆனால் காக்காதேசத்தில் ஏற்கெனவே 1½ எக்கர் நிலம் நன்கொடை வழங்கப்பட்டதாலும், மேலும் 3½ எக்கர் நிலம் அவர்கள் மீண்டும் வழங்க முன்வந்ததாலும், பழைய கட்டிடம் பழுது பார்க்கப்பட்டு வருவதாலும் அரசாங்கம் காக்கா தேசத்தில் அந்த மருத்துவ மனையை அமைப்பது என்று முடிவு செய்து இருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் ஆங்காங்கு செயல்பட்டு வருகிறது. சில ஒன்றியங்களில் அதிகமாக ஊராட்சி மன்றங்களும், சில ஒன்றியங்களில் குறைவான ஊராட்சி மன்றங்களும் இருக்கிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் திருச்செந்தூர் ஒன்றியத்தில் 15 ஊராட்சி மன்றங்களும் ஆழ்வார் திருநகரி ஒன்றியத்தில் 33 ஊராட்சி மன்றங்களும் இருக்கின்றன. ஆகவே, ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருப்பதை, ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை வைத்து, ஒன்றியங்களுக்குக் கூடுதலாக இரண்டு சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு விடை மிக தீவிரமாக பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அது ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒன்றுதான் என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அந்த முறையில் பெரும் அளவுக்கு நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இன்னும் முழு அளவு நிறைவேற்றப்படவில்லை. இதை முழு அளவில் நிறைவேற்ற ஆகும் செலவை கணக்கிட்டுப் பார்க்கிற போது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று அமைப்பதே கடின மாக இருக்கிறது. இரண்டு அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்காக வேண்டி தனியார் யாராவது ஏறத்தாழ 1 லட்சம் அளவுக்கு பணம் கொடுக்க முன்வருவார்களேயானால், அதைப் பற்றி யோசிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

Mobile Courts

* 53 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places in the State where Mobile Courts have been constituted; and

(*b*) whether there is any proposal to extend the scheme to other places in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) சென்னையிலும் மதுரையிலும் அமைந்துள்ளன.

(இ) கோயம்புத்தூரில் போக்குவரத்துத் தனி இயல் ஊர்தி நீதி மன்றம் ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

THIRUMATHI : T. N. ANANDANAYAKI : Mr. Speaker. Sir, will the Hon. Minister tell us whether there is any benefit by these mobile courts as the fines are collected on the spot and whether the amount is higher than that collected in the Courts?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அது மக்களின் சௌகரியத்தைக் கருதி அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே லாப நஷ்டக் கணக்கு பார்ப்பதற்கு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மொபைல் கோர்ட்டைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மதுரையில் மொபைல் கோர்ட் இருக்கிறது. அதே போல், மதுரையிலும் ஹைகோர்ட்டின் விசேஷப் பகுதி ஆரம்பிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றி அரசாங்கம் உயர்நீதி மன்றத்தோடு பரிசீலித்து வருகிறது.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதி மன்றங்கள் போக்குவரத்து நெருக்கடியான சாலையில் நிறுத்தப் படுகிறபடியால், போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது.